**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**MCOP 36/2024**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ். முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கலாராணி | க/பெ. | சிவமணி |
| கிராமம்: | மழவராயநல்லூர் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 41 | முகவரி: | மழவராயநல்லூர், திருவண்டுதுறை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 18.06.2025

**முதல் விசாரணை :-**

நான் மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.12.2023 | முதல் தகவல் அறிக்கை | Attested Xerox Copy |
| ம.சா.ஆ.2 | 25.12.2023 | போஸ்ட் மார்ட்டம் | Xerox Copy |
| ம.சா.ஆ.3 | 27.12.2023 | வாகன ஆய்வறிக்கை ( TN 50 AV 6066 ) | Xerox Copy |
| ம.சா.ஆ.4 | 03.05.2023 | காப்பீட்டு நகல் ( TN 50 AV 6066 ) | Xerox Copy |
| ம.சா.ஆ.5 | 11.03.2024 | வாரிசு சான்றிதழ் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) | Xerox Copy |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் புகார் அளித்தது சூரியதர்ஷினி என்றால் சரிதான் அவர் என் மகள். என் மகள் அளித்த புகாரில் நான் சிங்கபூரில்வேலை பார்த்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை.

எனது கணவரின் வயது , தொழில் வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யாருடைய அஜாகிரத்தையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும் ஓட்டுநர் மீது தான் தவறு. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.